சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள். 01.02.2024
SC.NO.31/2023
PW5 : ராமகிருஷ்ணன் (வயது 55 ) த/பெ.மருதமுத்து
(எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் )
(சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

முதல் விசாரணை

நான் தற்போது இலால்குடி வட்டம், கொப்பாவளி கிராமம், காட்டூர் ரோட்டில் குடியிருக்கிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு அ.சா1,2 மற்றும் 3 ஐ எனக்கு தெரியும். எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் தான். 04.12.2010 ஆம் தேதி காலை 9 மணியளவில் அ.சா.1 சுஜாதா வீட்டில் அவரது தங்க செயினை யாரோ அவரை தாக்கி பறித்து சென்றுவிட்டதாக கேள்விப்பட்டு நான் சென்று விசாரித்தேன். அப்போது அங்கு இலால்குடி காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தில் விசாரணை செய்து கொண்டிருந்தார். சம்பவ இடத்தை வரைபடம் வரைந்தும் பார்வை மகஜர் த யார் செய்தும், அதில் என்னை சாட்சியாக கையெழுத்து போட சொன்னதின் பேரில் நான் கையெழுத்து போட்டேன். என்னுடன் எங்கள் ஊராட்சி மன்ற தலைவர் பன்னீர் செல்வமும் மகஜரில் சாட்சியாக கையெப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் அது அ.சா.ஆ.4/அ.சா.5 ஆகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்.

குறுக்கு விசாரணை ( 2 ஆம் எதிரி தரப்பில் )

அ.சா.1,2 ஆகியோர் எனது உறவினர்களா என்றால் அ.சா.1 எனது மருமகள், அ.சா.2 எனது மகன் உறவு ஆகும். எழுதாத வெள்ளை காகிதத்தில் தான் நான் மற்றும் பன்னீர் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல எழுதிய பேப்பதில் கையொப்பம் செய்தோம். காவலர்கள் முன்னரே எழுதி தயார் செய்த பேப்பரில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அதில் என்ன எழுதியிருந்தது என்ற முழு விவரமும் எனக்கு தெரியுமா என்றால் காட்டு ரோடு, தெருவில் திண்ணை, மரம் பக்கத்தில் எனது வீடு போன்ற விவரங்களை எழுதியிருந்தார்கள். இதை தவிர வேறு விவரங்கள் இல்லை என்றால் சரிதான். அ.சா.1, 2 எனது உறவினர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
( 1 ஆம் எதிரி தரப்பில் 2 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்புகை செய்யப்படுகிறது )

( மறு விசாரணை - இல்லை )

/signed/
ராமகிருஷ்ணன்

S VIJAYAKUMAR
Digitally signed by S VIJAYAKUMAR
Date: 2024.02.01 12:54:36 +0530

Sub Judge,
Lalgudi